AUGUST 31, 2020
MONDAY
VOL: 006/084
RS. 10.00
LATE CITY★

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk

# தமிழ் Mirror



திருகோணமலை



மட்டக்களப்பு



யாழ்ப்பாணம்

# எங்கள் உறவுகள் எங்கே?

**வடக்கு, கிழக்கில் உறவுகள் கேள்வி**

## சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம் நேற்று

## பெரும்பாலான பிரதேசங்கள் பெரும் சோகம்

**பொலிஸாரின் தடையுத்தரவையும் மீறி மட்டக்களப்பில் போராட்டம்**

**30/1 தீர்மானத்தின் பரிந்துரைகள் நிறைவேற்றப்படவில்லை**

சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமான நேற்று (30) வடக்கு, கிழக்கில், சகல மாவட்டங்களிலும் உறவினர்களைத் தேடி, அவர்களின் உறவினர்கள், கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளில் ஈடுபட்டனர். இதனால், வடக்கு,கிழக்கில் பெரும்பாலான பிரதேசங்கள் பெரும் சோகமயமாக நேற்று (30) காட்சியளித்தன.

இறுதி யுத்தத்துக்கு முன்னரும் யுத்தத்தின் போதும் கைது செய்யப்பட்ட பலரும் இதேவேளை, இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டோரும் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## தாயின் முயற்சி தடுக்கப்பட்டது

சொர்ணகுமார் சொரூபன்

காணாமற்போன உறவினர்களால், நேற்று (30) யாழ்ப்பாணத்தில், முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றிருந்த தாயொருவர் மேற்கொள்ளவிருந்த தவறான முயற்சி, அங்கிருந்தவர்களால் தடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## தந்தையைத் தேடி பிள்ளைகள் பேரணி

இறுதிப்போரின் போதும் மற்றும் அரச படைகளாலும் துணை இராணுவக் குழுக்களாலும் காணாமல் ஆக்கப்பட்டு, பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தின் போது தங்களது தந்தையைத் தேடி, போராட்டக் களத்தில் பிள்ளைகள், நேற்று (30) குதித்திருந்தனர்.

தொடர்ச்சி P2

## ‘நான்கு ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை அதிகரிக்குக’

அரசமைப்புத் திருத்தத்தில், நீதிச்சேவை, அரச, பொலிஸ், தேர்தல் ஆகிய நான்கு ஆணைக்குழுக்களின் அதிகாரங்களும் அதிகரிக்கப்படவேண்டுமென சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்பான (கபே) கோரிக்கைவிடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

இ.தொ.காவால்

## ‘சந்தா காப்புறுதி’

க.ஆ.கோகிலவாணி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு சந்தா செலுத்தும் தொழிலாளர்களுக்கு, சந்தா பணத்தினூடாகக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக, தோட்ட வீடமைப்பு, சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொழிலாளர்கள், தொழில் நேரங்களில் எதிர்கொள்ளும் விபத்துகளின்போது, இந்தக் காப்புறுதித் திட்டம் அவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் என்றும், இது ஒரு முன்னகர்வுத் திட்டம் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 107ஆவது ஜனன தினத்தையொட்டி, இ.தொ.காவின் தலைமையகமான சௌமியபவனில் நேற்று (30) நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், பெருந்தோட்டங்களில் நிலவிவரும் குளவிக் கொட்டுப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க, முக்கியமான நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் குளவிகளுக்கு இரசாயனங்களைத் தெளிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்தும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## 107ஆவது ஜனன தினம்...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 107ஆவது ஜனன தினத்தையொட்டி, அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, பழைய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (30) நடைபெற்றது. அமரர் தொண்டமானின் குடும்பத்தவர்களான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் செந்தில் தொண்டமான் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

19ஆவது திருத்தத்தில்

## ‘இரண்டு நேர்மறைகள் தொடர்பில் அவதானம்’

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் போது, அதிலிருக்கும் இரண்டு நேர்மறைகள் தொடர்பில் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டு 20ஆவது திருத்தத்தில் உள்வாங்கப்படுமென, அதுவே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகுமென இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

**ஐ.தே.கவின் தலைமைத்துவ விவகாரம் சூடுபிடிக்கிறது:**



## ‘தூக்கி நிறுத்துவேன்’

ஷேன் செனவிரத்ன

ரணில் விக்கிரமசிங்கவின் உள்நோக்கத்தின் பிரகாரம், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவதைத் தான் கோரவில்லையெனத் தெரிவித்த, கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் விஜயவர்தன,

தொடர்ச்சி P2

## ‘நான் தயார்’

**கட்சியின் தலைமைத்துவ பதவிக்காக, நான் சண்டையிடமாட்டேன்**

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு தான் தயாரெனத் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, கட்சியை வழிநடத்துவதற்கு தான் தேவையெனில், அதற்கு தான் தயார் என்றார்.

தொடர்ச்சி P2



## வெளிநாட்டு பட்டதாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

**திருகோணமலையை சேர்ந்த பட்டதாரிகள் போராட்டத்துக்கு ஆயத்தம்**

ஏ.ஆர்.எம். றிபாஸ், ஏ.எம்.ஏ. பரீட்

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள், தங்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமெனக் கோரி, கொழும்பு காலிமுகத் திடலில், செப்டெம்பர் 3ஆம், 4ஆம் திகதிகளில், இரண்டு நாள்கள், ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘நான்கு ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை அதிகரிக்குக’

“ஆணைக்குழுக்களை அரசாங்கம் மென்மேலும் செயற்படுத்தவேண்டுமாயின், அவற்றின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்” என்று அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்துள்ளார்.

சில ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் குறித்து, சமூகத்தில் கருத்து வேறுபாடுகள் இருப்பதால் அவற்றை ஒழிக்காமல் அவற்றைச் செயற்படு ப்படுத்துவதே சிறந்த தீர்வாகுமெனத் தெரிவித்துள்ள அவர், சுயாதீன ஆணைக்குழுக்களானது நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் என்றும் அந்த ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக எழுந்துள்ள சில பிரச்சினைகளைத் தீர்ப்பது ஜனநாயகத்தை மதிக்கும் ஓர் அரசாங்கத்தின் கடமையாகும் என்றார்.

சுயாதீன ஆணைக்குழுக்களால் நாட்டின் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படுவதாகத் தெரிவித்த அவர், ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் எழுந்துள்ள சில பிரச்சினைகளைத் தீர்த்து, அதனை நடத்திச் செல்வது ஜனநாயகத்தை மதிக்கும் அரசாங்கத்தின் கடமையாகும் என்றார்.

“கொரோனா வைரஸ் தொற்றின் மத்தியிலும் பொதுத் தேர்தலை மிகவும் வெற்றிகரமாக நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டமையே காரணமாக அமைந்தது” என்றார்.

## தந்தையைத்...

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தங்களுடைய உறவுகளைத் தேடும், இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் பல்வேறான கோரிக்கைகளை முன்வைத்து அழுத்தங்களை கொடுத்து தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்களில், வயது முதிர்வு, நோய்வாய்ப்பட்ட நிலையில், 70இற்கும் மேற்பட்ட உறவுகள் உயிரிழந்துவிட்டனர். இந்நிலையில், காணாமல் போனவர்களின் பிள்ளைகள் போராட்டக் களத்தில் குதித்துள்ளனர்.

முல்லைத்தீவில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் முல்லைத்தீவு பஸ் நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடி, பேரணியாகச் சென்று, மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதற்கு முன்னதாக, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி, உயிரிழந்த பெற்றோர்கள், உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தைப் பிள்ளைகள் முன்னெடுத்தனர்.

## ‘தூக்கி நிறுத்துவேன்’

கட்சி ஆதரவாளர்களின் கோரிக்கைக்கு அமைய, தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்று, வீழ்ந்திருக்கும் கட்சியைத் தூக்கி நிறுத்துவேன் என்றார்.

கண்டி- ஸ்ரீ தலதா மாளிக்கைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த அவர், அஸ்கிரிய, மல்வது மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கட்சி ஆதரவாளர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து, கட்சியை மீண்டும் கட்சியெழுப்பும் வேலைத்திட்டம் என்னிடம் இருக்கிறது. கட்சியில் கடந்த காலங்களில் குறைபாடுகள் இருந்தன. இதனால் ஏமாற்றமடைந்த ஆதரவாளர்கள், கட்சியில் பதவிநிலையிலிருந்த சகலருக்கும் பாடமொன்றைக் கற்பித்துவிட்டனர்” என்றார்.

அடுத்த வாரம் கூடும் கட்சியின் செயற்குழு, கட்சியின் எதிர்காலம், ஆதரவாளர்களின் நாளைய நாள், ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு நல்லதொரு தீர்மானித்தை எடுக்குமென நம்பிக்கை தெரிவித்துள்ள அவர், கட்சியின் தலைமைத்துவத்துக்குப் பலரின் பெயர்களும் முன்மொழியப்பட்டுள்ளன. எனினும், இறுதித் தீர்மானம் எவையும் எட்டப்படவில்லை. சிலவேளைகளில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படக்கூடும்” என்றார்.

“கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் ஆசீர்வாதம் தேவை. அவர், உறவினர்களைப் பார்த்துத் தீர்மானங்களை எடுப்பவர் அல்லர்” என்றார்.

ஐ.தே.கவுக்குள் பௌத்த, சிறுபான்மை வாக்குகள் குறைந்துவிட்டன. அவற்றையெல்லாம் கட்டியெழுப்புவதற்கு, கட்சிக்குள் தெளிவான மறுசீரமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமெனத் தெரிவித்த அவர், சஜித் பிரேமதாஸ தனியொரு கட்சியை அமைத்துக்கொண்டு, நாடாளுமன்றத்திலும் பிரதிநிதித்து வப்படுத்துவதால். அவரால், ஐ.தே.கவின் தலைமைத்துவத்துக்குப் போட்டியிடமுடியாது என்றார்.

.................................................................................................

## ‘நான் தயார்’

ஊடகவியலாளர்களை நேற்று (30) சந்தித்துக் கருத்துரைத்த அவர், ஐ.தே.கவின் செயற்குழுவில் தன்னுடைய பெயரும், தலைவர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டது. இன்னும் சிலரின் பெயர்களும் சிபாரிசு செய்யப்பட்டன என்றார்.

கட்சியைப் பிளவுபடுத்துவதற்குத் தான், எதனையும் செய்யமாட்டேன் எனத் தெரிவித்த அவர், ஐக்கிய தேசிய கட்சிக்கு, மக்களிடத்தில் எவ்வாறான செல்வாக்கு உள்ளதென்பது பற்றி தனக்குத் தெரியும். ஆகையால், தலைமைத்துவதை ஏற்று, கட்சியை முன்னோக்கிய பாதையில் கொண்டுசெல்லமுடியும் என நம்பிக்கைத் தெரிவித்தார்.

“கட்சியின் தலைமைத்துவ பதவிக்காக, நான் சண்டையிடமாட்டேன். எனினும், கட்சியின் ஐக்கியத்துக்கு எது முக்கியம் என்பதே என்னுடைய கருத்தாகும்” என்றார்.

# எங்கள் உறவுகள் எங்கே ?

அதற்கெதிராகவும் உறவுகளைத் தேடியும் வடக்கு,கிழக்கைச் சேர்ந்தவர்கள், பல்வேறான போராட்டங்களை 2009ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து வருகின்றனர்.

தங்களுக்கு நீதி கிடைக்காமையை அடுத்தே, தமக்கான நீதியை வழங்குமாறு சர்வதேசத்திடம் வலியுறுத்தியே கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு அண்மையில், ஒன்றுதிரண்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேவேளை, கிழக்கில், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தனித்தனியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள், “இலங்கை அரசின் மீதான, சர்வதேச குற்றவியல் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு” கோஷமெழுப்பினர்.

“நீதி வேண்டும்; நீதி வேண்டும்”, “காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வேண்டும்”, “சர்வதேசம் தலையிட்டு நீதியைப் பெற்றுத்தர வேண்டும்”, “இராணுவத்தை நம்பிக் கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்” உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்ட சுலோகங்களையும் பேரணியில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

### திருகோணமலையில்

கடத்தப்பட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வேண்டுமென்ற தொனியில் திருகோணமலை பஸ் நிலையத்துக்கு முன்பாக அமைதி வழிப்ன போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்த, வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளருக்கு அனுப்பவிருக்கும் கடிதத்தின் பிரதியை, ஊடகங்களுக்கு கையளித்தனர்.

யுத்தத்தின் போதும் யுத்தத்தின் முடிவிலும் தமிழ் மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் இனப்படுகொலை உள்ளிட்ட மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்களில் ஈடுபட்டமைக்கு எதிராக, சர்வதேச நீதி விசாரணையை தமிழ் மக்கள் கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து வலியுறுத்தி வந்தனர் என, அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, மாறிமாறி ஆட்சிப்பீடமேறும் இலங்கை அரசாங்கங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்காது, தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

30/1 தீர்மானத்தின் பரிந்துரைகள் நிறைவேற்றப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மிகவும் ஏமாற்றத்தைத் தரக்கூடிய தீர்மானத்தைக்கூட நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் தயாரில்லை என்பதையும் எவ்வித சந்தேகமின்றி நிரூபித்துமுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறலும் தமிழ் மக்களுக்குரிய நீதியும் கிடைப்பதாக இருந்தால் முழுமையான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையூடாக மட்டுமே சாத்தியமாகுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள அக்கடிதத்தில், தங்களது தலைமையில் நடைபெற இருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 44ஆவது கூட்டத் தொடர் நடைபெறுவதற்கு முன்னதாக அவ்வகையான சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றமூடாகவோ, அல்லது சர்வதேச குற்றவியல் விசேட தீர்ப்பாயம் ஒன்றினூடாகவோ நடத்துவதற்கான நடவடிக்கைகளை தாங்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கும் அறிக்கையில் நீதியையும் பொறுப்புக் கூறுதலையும் சாத்தியப்படுத்த அவசியமான அரசியல் விருப்பு, இலங்கை அரசாங்கத்திடம் இல்லை என்பதால், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மார்ச் 2019 கூட்டத்தொடரில் ஸ்ரீ லங்கா அரசாங்கத்துக்கு வழங்கிய கால அவகாசத்தை நீக்க வேண்டுமென்ற முன்மொழிவைத் தாங்கள் முன்மொழிய வேண்டும்.

2. இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக மேற்கொள்ள வேண்டுமென, ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது ஐ.நா செயலாளர் நாயகத்துக்குப் பரிந்துரை செய்யத் தாங்கள் வலியுறுத்த வேண்டுமெனக் கோருகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான ஐ.நா குழு இலங்கையை முழுமையாக விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐ.நா செயலாளர் நாயகத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும்.

இலங்கைக்கான விசேட ஐ.நா அறிக்கையாளரை நியமிக்க வேண்டும் என்ற பரிந்துரையையும்,வடக்கு-கிழக்கு நிலைவரத்தைக் கண்காணிக்கவும் மேம்படுத்தவும் உறுதுணையாகவும் இருக்க ஐ.நா மனித உரிமை ஆணையாளர் கள அலுவலகம் ஒன்றை வடக்கு- கிழக்கில் நிறுவ வேண்டும் எனவும் மீளவும் வலியுறுத்துகின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பொலிஸாரின் தடையை மீறி பேரணி

இதேவேளை, மட்டக்களப்பில் பொலிஸாரின் தடையுத்தரவையும் மீறி, பெருந்திரளாகத் திரண்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள், தங்களுடைய உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில், நீதியைக் கோரி, பேரணியில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு- கல்லடி பாலத்துக்கு அருகிலுள்ள புனித செபஸ்தியார் தேவாலய வளாகத்தில் ஒன்று கூடியவர்கள், பேரணியாகச் செல்ல முற்பட்ட போது மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் பெறப்பட்ட பேரணிக்கு எதிரான தடையுத்தரவை வாசித்து பேரணித் தடுத்தனர்.

தேவாலயத்தின் நுழைவாயிலையும் மூடிய பொலிஸார், பேரணியாகச் செல்வதைத் தடுத்தனர். அங்கு பொலிஸார், கலகம் அடக்கும் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாணாக்கியன், பொலிஸாருடன் கலந்துரையாடினார். “இந்தத் தடை உத்தரவானது, அமலநாயகி என்கின்ற தனி நபருக்கானதாகும். இந்தப் பேரணியை காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படவுள்ளது. ஆகவே, அமைதியாகச் செல்வதற்கு எமக்கு இடம் தாருங்கள்” எனக் கேட்டார்.

அதற்குப் பொலிஸார் இடமளிக்கவில்லை. இதையடுத்து வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பெருந்திரளானோர், மூடப்பட்டிருந்த தேவாலயத்தின் கதவைத் தள்ளியவாறு திறந்து, அங்கிருந்து வெளியேறிப் பேரணியாக மட்டக்களப்பு நகரிலுள்ள காந்தி பூங்காவுக்கு முன்பாகச் சென்றடைந்தனர்.

(சண்முகம்தவசீலன் ஹஸ்பர் ஏ ஹலீம்,ஏ.எம். கீத், மு.தமிழ்ச்செல்வன், எம்.எஸ்.எம்.நூர்தீன், எஸ்.நிதர்ஷன், சொர்ணகுமார் சொரூபன், எப். முபாரக், பொன்ஆனந்தம், செ.கீதாஞ்சன்)

## ‘இரண்டு நேர்மறைகள் தொடர்பில் அவதானம்’

கண்டி, மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“தனிப்பட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, அரசமைப்பில் 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதில், நேர்மையான விடயங்கள் உள்ளன. உதாரணமாக, ஜனாதிபதியின் பதவிக்காலத்தை வரையறை செய்தமை, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டிய காலம் வரையறுக்கப்பட்டமை ஆகியனவாகுமெனத் தெரிவித்துள்ள அவர், இவ்விரண்டு விடயங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார் என்றார்.

## வெளிநாட்டு...

தங்களுக்கான வேலைவாய்ப்பை வழங்கக் கோரியும் கடந்த ஆட்சியில், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்குத் தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகையால், தங்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கவேண்டுமென வலியுறுத்தியுமே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்மைய, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் படித்த திருகோணமலையைச் சேர்ந்த பட்டதாரிகளே, இவ்வாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தாயின்...

அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த தாயொருவர், தன்னுடைய வாயில் கட்டியிருந்த துணியைப் பயன்படுத்தி, தவறான முயற்சியில் ஈடுபட்டார்.

தனது குடும்பத்தைச் சேர்ந்த பலரில் சிலரை அந்தத் தாய், யுத்தத்தில் இழந்துவிட்டார். இன்னும் சிலர் காணாமல் ஆக்கப்பட்டுவிட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ‘சந்தா காப்புறுதி’

குளவிகளுக்கு இரசாயனம் தெளிப்பதால், பெருந்தோட்டங்களில் பணிபுரியும் கர்ப்பிணிகள் உள்ளிட்ட தொழிலாளர்கள் பாதிப்படைவர். எனவே, தொழிலாளர்களுக்கு எவ்விதப் பாதிப்புகளும் ஏற்படாத வகையில், குளவிக்கொட்டுப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆலோசித்து வருவதாகவும் தெரிவித்தார்.

இரசாயனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, சீன நிறுவனம் ஒன்றுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும், ஜீவன் தெரிவித்தார்.

இதேவேளை, குளவிக் கொட்டுக்கு உள்ளாகும் தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், மலையகத்தில் வேலையற்ற நிலையிலுள்ள தாதியர்களுக்கு இந்தியாவில் விசேட பயிற்சி வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில், இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடமும் அப்பலோ மருத்துவமனை நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தங்களது அனுசரணையூடாக, மலையகத்தில் வேலைவாய்ப்பற்றுள்ள தாதியர்களை, இந்தியாவின் அப்பலோ மருத்துவமனைக்கு அனுப்பி, விசேட பயிற்சி அளிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பயிற்சி நிறைவடைந்து தாதியர்கள் இலங்கைக்குத் திரும்புபோது, இந்திய அரசாங்கத்தினூடாக அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொடுக்கவுள்ளதாகவும் நுவரெலியா மாவட்டத்தில் ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வீதம், 320 மோட்டார் சைக்கிள்களைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார். எனவே, ஒரு தோட்டத்தில் குளவிக் கொட்டு இடம்பெறும்போது, விசேட பயிற்சி அளிக்கப்பட்ட தாதிகள், 15 நிமிடத்துக்குள் சம்பவ இடத்துக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிற்பேட்டைகளை ஊருவாக்குவது தொடர்பில், சம்பந்தப்பட்ட அமைச்சுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் பெருந்தோட்டங்களிலுள்ள காணிகள் அனைத்தும், பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழ் இருப்பதால், காணிகளைப் பெற்று தொழிற்பேட்டைகளை உருவாக்குவது தொடர்பில், அந்நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும், இது தொடர்பான முன்மொழிவுகளைத் தயாரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபாய் சம்பள விவகாரம் தொடர்பில், பிரதமருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும் வெகுவிரைவில், பெருந்தோட்டக் கம்பனிகளுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்த அவர், இந்தப் பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்படாமல், சுமூகமான முறையில் நிறைவடையும் என்றும் தெரிவித்தார்.

பெருந்தோட்டங்களில், சிறுத்தைகள் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. தேயிலைத் தோட்டங்கள் காடுகளாகியமையே இதற்குப் பிரதான காரணமாகும். பெருந்தோட்டக் கம்பனிகளே இதற்குப் பொறுப்புகூற வேண்டும். பெருந்தோட்டப் பகுதிகளில், 4,000 ஹெக்டெயர் நிலப்பரப்பிலேயே மீள்நடுகை செய்யப்பட்டுள்ளது. மீள்நடுகை செய்தால் மட்டுமே, தோட்டக் காணிகள் காடுகளாகின்றமையைத் தவிர்க்க முடியும். அவற்றைச் சீர்செய்வது தொடர்பிலும், பெருந்தோட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தார்.

“பெருந்தோட்டங்கள் பலவற்றில், அரைநாள் சம்பளப் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. தொழிலாளர்களுக்கு அரைநாள் சம்பளம் வழங்குவது தொடர்பில் எந்தச் சட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை. இது தொடர்பில் நாமும் தெளிவுபடுத்தியுள்ளோம். எனவே, அரைநாள் சம்பளப் பிரச்சினையை எதிர்கொள்ளும் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், எமது தொழிற்சங்கத்திடம் அறிவித்தால், அதற்குரிய நடவடிக்கையை எடுக்க முடியும்.

அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பதவி தொடர்பில் இ.தொ.காவின் பேராளார் மாநாட்டிலேயே தீர்மானிக்கப்படும் என்றும் பேராளார் மாநாடு, வெகுவிரைவில் கூட்டப்படும் என்றும், ஜீவன் தெரிவித்தார்.



# அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 107 ஆவது ஜனன தினம்



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 107ஆவது ஜனன தினத்தையொட்டி, அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, பழைய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (30) நடைபெற்றது.

இந்நிகழ்வில், இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு, சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கலந்துகொண்டு, மலர் மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து, இ.தொ. காவின் தலைமையகமான சௌமியபவனில், அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், இ.தொ. காவின் ஆவணங்களடங்கிய கண்காட்சியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில், இ.தொ.காவின் நிதிக் காரியதரசியும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ராமேஸ்வரன், உபதலைவர்களான செந்தில் தொண்டமான், பி.சக்திவேல், கணபதி கனகராஜ் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.




உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்

தமிழ்Mirror www.tamilmirror.lk

பதிவு செய்வதற்கு

Dialog Type ACT TM and send to 87798
Daily Rs.1/=+TAX

HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+ TAX

Mobitel Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX



* Terms and conditions apply

தலைமை – மணிவண்ணன் அணிகளுக்கிடையே முறுகல்;

# சூடுபிடிக்கிறது

## 6 பேரை பதவி நீக்க வழிதேடுகிறது தலைமை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்களாக உள்ள தமது கட்சி சார்ந்த 6 பேரைப் பதவி நீக்கம் செய்வதற்கான வழிமுறைகள் உள்ளனவா என்று, தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரியொருவரிடம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆலோசனைப் பெற்றுள்ளதாக, கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாநகர சபைத் தேர்தலில், கட்சியின் சார்பில் நேரடியாக வட்டாரங்களில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இந்த 6 உறுப்பினர்களையும், அவர்களது சம்மதம் இன்றி, கட்சியாக வெளியேற்றுவதற்கான நடைமுறை உள்ளதா, அவர்களை நீக்கும் அதிகாரம் கட்சிக்கு உள்ளதா, இவ்வாறு உள்ளது எனில், எந்தச் சந்தர்ப்பத்தில் உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்ய முடியும் என்பது தொடர்பிலேயே, ஆலோசனை பெறப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதையடுத்து, பதவி விலகல் மூலமோ அல்லது நீதிமன்றத்தின் உத்தரவின் பேரிலோ அல்லது கட்சியின் உறுப்புரிமையை முற்றாக இழப்பதன் மூலமோ மட்டுமே, ஓர் உறுப்பினரது பதவியை இழக்கச் செய்யமுடியுமென, கட்சியினருக்கு அந்த அதிகாரி கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக்கும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் அணிக்கும் இடையிலான முறுகல் நிலைமை உச்சமடைந்துள்ள நிலையில், மணிவண்ணன் சார்பான முக்கியஸ்தர்களைக் களை எடுக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அண்மையில், ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

இதைத் தொடர்ந்து, இதன் முதற்கட்டமாக மாநகர சபை மீது முன்னணியின் கவனம் திரும்பியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் முன்னணியின் உறுப்பினர்கள் 13 பேர் உள்ள நிலையில், ஒருவர் நீதிமன்றக் கட்டளையின் பேரில் சபைக்குச் சமூகமளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. (சட்டத்தரணி வி.மணிவண்ணனின் மாநகர சபை உறுப்புரிமையை நீக்க வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது)

எஞ்சிய 12 பேரில், நால்வர் மட்டுமே கட்சியின் தலைமைக்குச் சார்பாகவும் எஞ்சிய 8 பேரும் மணிவண்ணனுக்குச் சார்பாகவும் உள்ளனர். அதில், பட்டியல் மூலம் தேர்வான இருவரைப் பதவி விலகுமாறு, ஏற்கெனவே கட்சி அறிவித்துவிட்டது.

இந்நிலையில், தற்போது எஞ்சியுள்ள 6 பேரையும் பதவி விலக்குவதற்கு வழி தேடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மலையகத்தைக் கட்டியெழுப்ப

# ‘ஜீவனுக்கு அழுத்தம் கொடுப்போம்’

“மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பலர் நாடாளுமன்றம் சென்றுள்ள நிலையில், அமைச்சராக ஒருவர் ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கிறார். அவர், எமது தரப்பைச் சார்ந்தவரல்லாத போதிலும், மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த, அமைச்சரொருவர் இருக்கிறார் என்பது பெரும் பலம். அவரூடாக, மலையக மக்களுக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்விக்க, எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு நாம் அழுத்தம் கொடுப்போம்” என, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

எப்போதும் அரசாங்கத்துடன் இருக்கும் போதே, மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கலாம் என்றும் எதிர்க்கட்சியில், வெறும் வாய்ச்சொல் வீரராக மாத்திரமே இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.



“இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பழமையான அரசியல் வரலாற்றைக் கொண்டிருந்தாலும், மலையகத்துக்கு ஒரு சதவீத வேலைகளைக்கூட செய்யவில்லை. குறிப்பாக, தனிவீட்டுத் திட்டமோ பிரதேச சபைகளை அதிகரித்தல் தொடர்பான எந்தவொரு வேலைத்திட்டத்தையோ முன்னெடுக்கவில்லை. ஆனால், கடந்த நான்கரை வருடங்களில் இந்த வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்தோம்.

“ஒரு இலட்சம் வாக்குகளை எடுப்பது பெரிய விடயம் அல்ல. எமது கட்சிக்கான வாக்குகள் குறையவில்லை. ஆனால், இன்னுமோர் ஆசனத்துக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது. எங்களுடைய வாக்குகளே அனுஷாவுக்குக் கிடைத்தது.

“வீடமைப்புத் திட்டத்தில், நான் மோசடியில் ஈடுபட்டதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் குற்றஞ்சாட்டுகிறது. அப்போது அப்பா பொய்களைக் கூறினார். இப்போது அவரது மகன் ஜீவன் பொய் கூறுகிறார். ஆனால், யார் என்ன சொன்னாலும், மலையகத்தில் ஊழலில் ஈடுபடாத ஒரே அமைச்சர் நான்.

“தொண்டமான் பவுன்டேஷனில் பாரிய ஊழல்கள் நடந்திருந்தன. இதனை விசாரிக்க முற்பட்ட போது, அதிகாரத்தைக் கொண்டு அதைத் தடுத்து நிறுத்தினர். இன்று, நான் ஊழல் செய்துள்ளேன் என்று பொய்ப் பிரசாரத்தைச் செய்கின்றனர். மூன்றில் இரண்டுப் பெரும்பான்மையுடன் பலமான அரசாங்கமொன்று உள்ளது. நான் ஊழல் செய்திருந்தால், சட்டத்தின்முன் நிறுத்திக் காட்டுங்கள். நான் அமைத்துள்ள அனைத்து வீடுகளும் தரமானவையே” என்று, முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம், தனியார்த் தொலைக்காட்சி ஒன்றுக்குக் கூறியுள்ளார்.

# ஆணைக்குழுவில் ரணில் இன்று ஆஜர்

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்று (31) ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகவுள்ளாரென அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு வாக்குமூலமளிப்பதற்காக, இந்த மாதம் 21ஆம் திகதி முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைக்கப்பட்டிருந்த போதும், அன்றைய தினம் தன்னால் வரமுடியாது என்றும், இன்றே தன்னால் ஆஜராக முடியுமென ரணில் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை தொடர்பாக வாக்குமூலமளிக்கவே இன்று அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் சூரியன் உச்சம்

இன்றிலிருந்து இன்னும் சில நாள்களுக்கு, நாடளாவிய ரீதியில் மழையுடனான வானிலை சற்று அதிகரிக்குமென எதிர்வுகூறியுள்ள வானிலை அவதான நிலையம், செப்டெம்பர் 7ஆம் திகதி வரையிலும் இலங்கையில் சூரியன் உச்சம் கொடுக்குமென அறிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா, கிழக்கு மாகாணங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் சிறிதளவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றதென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வேகம் வரை அவ்வப்போது அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சூரியனின் தென்திசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக, செப்டெம்பர் 07ஆம் திகதி வரை, இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது.

சர்ச்சைக்கு மத்தியில்

# ஹரீஸுக்கு வெற்றிப் பாராட்டு விழா

ஸ்ரீ லங்கா முகா முஸ்லிம் காங்கிரசின் சார்பில் கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, நாளை (01) மாலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில், அவரது சாய்ந்தமருது அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளதுடன், கல்முனை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். ரஹீப் உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தல் காலப்பகுதியில், மாவட்டத்தை வெல்வோம் எனும் கருத்துப்பட பேசி, தமது ஆதரவாளர்களை தொலைபேசியின் பக்கம் வாக்களிக்க செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பிரதி தேசிய அமைப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப்பின் மீது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைமைப்பீடமும் முக்கியஸ்தர்களும் ஆதரவாளர்களும் கடுமையான அதிருப்தியில் இருக்கும் இச்சூழ்நிலையில், இந்த பாராட்டுவிழா நடைபெறவுள்ளது.

இதேவேளை, மக்கள் காங்கிரஸின் கொள்கைகளுக்கு எதிராக செயலாற்றியதாக குற்றஞ்சாட்டப்பட்ட சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளராக இருந்த ஏ.எம்.எம். நௌசாத் மீது அண்மையில் கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது போன்று, இவருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளதாக, அக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

# டியூ இராஜினாமா



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர, நேற்று (30) இராஜினாமாச் செய்துகொண்டார். எனினும், இராஜினாமாச் செய்தமைக்கான காரணத்தை அவர், அறிவிக்கவில்லை. எனினும், அவருடைய வெற்றிடத்துக்கு கலாநிதி ஜி.வீரசிங்க, நியமிக்கப்பட்டுள்ளார்.

# I,428 கி.கி உலர்ந்த மஞ்சள் மீட்பு

## 6 பேர் கைது கைது

நுரைச்சோலை மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளில், நேற்று முன்தினம் (29) கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 1,428 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டு உள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைதுசெய்யப்பட்டு உள்ளனர்.



இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சளின் பெறுமதி, 43 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது.

நுரைச்சோலை பகுதியில், கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது, 26 மஞ்சள் மூடைகளுடன் 2 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு உள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து, கார் ஒன்றும் லொறி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, கற்பிட்டி பகுதியில் டிங்கி படகொன்றில் இருந்து உலர்ந்த மஞ்சள் மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

**இவர்கள் 20, 26, 32, 33, 37, 43 ஆகிய வயதுடையவர்களெனவும், கடற்படையினர் தெரிவித்துள்ளனர்**

இதன்போது, படகில் இருந்த 4 பேர் கைதுசெய்யப்பட்டு உள்ளனர்.

இந்த நால்வரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது, கற்பிட்டி - வெள்ளந்தீவு பகுதியில் சூட்சகமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 18 உலர்ந்த மஞ்சள் மூடைகளும் கற்பிட்டி இப்பன்தீவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த 294 கிலோகிராம் நிறையுடைய 18 உலர்ந்த மஞ்சள் மூடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, மொத்தமாக 1,428 மஞ்சள் மூடைகளுடன் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள், கற்பிட்டி-கொட்டியாகும்புர பிரதேசத்தைச் சேர்ந்தவர்களெனவும் இவர்கள் 20, 26, 32, 33, 37, 43 ஆகிய வயதுடையவர்களெனவும், கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மஞ்சள் மூடைகள், இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில், கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது.

ஜூலை 28, 2020 முதல் நேற்று முன்தினம் (29) வரையான காலப்பகுதிகளில், சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சுமார் 12,270 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகளும் 25 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கண்டியில் நில அதிர்வு;

# காரணங்களை அனுமானித்தது விசாரணைக்குழு

கண்டி - தலாத்துஓயாவை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்ட அதிர்வுக்கு, 3 சம்பவங்கள் காரணங்களாக அமையலாம் என விசாரணைக்குழு அனுமானித்துள்ளது.

கற்குவாரியில் வெடி வைக்கப்பட்டதால் ஏற்பட்ட அதிர்வு இதற்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் உதய டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவ்வாறில்லை எனின் சுண்ணாம்பு கற்பாறை உடைந்து வீழ்ந்திருப்பதற்கான சாத்தியமுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

விக்டோரியா உள்ளிட்ட அதனை அண்மித்த நீர்த்தேக்கங்களில் ஏற்பட்ட உயர் நீர் அழுத்தம் மூன்றாவது காரணியாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிர்வினால் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகம் தெரிவித்துள்ளது.

**மக்கள் அச்சமடைய தேவையில்லை. நிலநடுக்கமொன்று ஏற்பட்டிருக்குமாயின், தமது பணியகத்தின் கீழுள்ள 05 மத்திய நிலையங்களில் அது குறித்து பதிவாகியிருக்கும்**

கண்டி -தலாத்துஓயாவை அண்மித்த சில பகுதிகளில் நேற்றிரவு 8.34 மணியளவில் சிறியளவில் அதிர்வொன்று பதிவாகியது.

திகன, அளுத்ஹேன, அம்பக்கோட்டே, ஹாரகம மற்றும் குருதெனிய ஆகிய பகுதிகளிலேயே அதிர்வு பதிவாகியுள்ளது.

எனினும் இதுவொரு நிலநடுக்கம் அல்லவென புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரிவித்தார்.

இது குறித்து மக்கள் அச்சமடைய தேவையில்லை என புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கமொன்று ஏற்பட்டிருக்குமாயின், தமது பணியகத்தின் கீழுள்ள 05 மத்திய நிலையங்களில் அது குறித்து பதிவாகியிருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு;

# ‘தகுதி இருந்தும் உள்ளடக்கப்படாதோர் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யவும்’

அரசாங்கத்தால் வழங்கப்படும் பட்டதாரிகளுக்கான நியமனங்களின்போது, தகுதி இருந்தும் உள்ளடக்கப்படாதவர்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்து, அவ்வாறு உள்ளடக்கப்படாதவர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என, பெருந்தோட்ட அபிவிருத்திக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஊவா மாகாணத்தில், ஆசிரிய உதவியாளர்களாக இயங்கி வந்தவர்கள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்த நிலையிலேயே, அவர்களுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. அவ்வாறானவர்களுக்கு அரசாங்க வேலைவாய்ப்பை வழங்குவதில் எந்தவிதத் தடையும் இல்லை என்றே தான் கருதுவதாகவும், அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில், செந்தில் தொண்டமான் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அங்கிகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களும், அரசாங்கத்தின் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்க முடியும் என, வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

“அதாவது, பல்கலைகக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் முதல் பட்டம் ஒன்று அல்லது அதற்குச் சமனான அல்லது மாற்றுத் தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் என, அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

“அதன் அடிப்படையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழங்களில் பட்டம் பெற்றவர்களும், அரசாங்க தொழில்வாய்ப்புக்காக விண்ணப்பித்திருந்தார்கள். ஆனபோதிலும், அவர்கள் அனைவரும் இதில் உள்ளடக்கப்படவில்லை.

“வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கென, இதுவரை அரசாங்க தொழில்வாய்ப்புக்கான நேர்முகப் பரீட்சை பிரத்தியேகமாக இடம்பெறவில்லை. மாறாக பொதுவாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றன. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் ஏனைய பட்டதாரிகள் மாற்று வழியின்றி உள்ளனர்.

“பதுளையில் எதிர்க்கட்சியிலிருந்து தெரிவான தமிழ்ப் பிரதிநிதிகளால், பத்திரிகையில் அறிக்கையும் நாடாளுமன்றத்தில் குரலும் மாத்திரமே எழுப்ப முடியும். அவர்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது. ஆதலால், பதுளை மாவட்ட அமைச்சர்கள், இந்த விடயத்தை மறு பரிசீலனை செய்து நியமனங்கள் பெற்றுத்தரும் பட்சத்தில், பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்க முடியும்” என்று, செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

# ‘பிரேமலால் ஜயசேகரவை 8ஆம் திகதி அழைத்து வரவும்’



மரண தண்டனைக் கைதியாக, சிறைத் தண்டனை அனுபவித்துவரும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவை எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரவேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர இரண்டாவது முறையாகவும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர், முதற்தடவையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும்போதும் அவர் சிறைச்சாலையிலேயே இருந்ததாகவும் கூறினார்.

**“ செப்டெம்பர் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கு, பிரேமலாலை அழைத்துவர வேண்டுமென, சிறைச்சாலை ஆணையாளருக்கு அறிவித்திருக்கிறேன்**

நாட்டு மக்கள் அவருக்கு வாக்களித்துள்ளனர். அதுவும் இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டாவது இடத்தில் வெற்றிபெற்றுள்ளார் எனவே மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். எனவே, செப்டெம்பர் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்கு அவரை அழைத்துவர வேண்டுமென தான், சிறைச்சாலை ஆணையாளருக்கு அறிவித்திருப்பதாகவும் கூறினார்.




# ‘இளைஞர்களிடையே எயிட்ஸ் அதிகரிப்பு’

19 - 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே எயிட்ஸ் நோய் பரவல் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக, நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தினூடாக சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் தரவுகளுக்கமைய, இளைஞர்கள் மத்தியில் எயிட்ஸ் நோய் பரவல் அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

அண்மைக்காலமாக இந்நிலைமை படிப்படியாக அதிகரித்து வருவதாகத் தெரிவித்த அவர், 2020ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 600 HIV தொற்றுக்குள்ளானோர் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

எனினும், இதுவரை 2 ஆயிரம் பேர் வரையிலேயே சிகிச்சைக்காகப் பதிவு செய்துள்ளதாகவும், ஏனையோர் தமக்கு ஏற்பட்டுள்ள தொற்றுக் குறித்து அறியாமல் இருப்பதாகவும், ஆரோக்கியமானவர்களும் இவர்களால் பாதிக்கப்படக்கூடுமெனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ‘விக்னேஸ்வரனின் கருத்துக்கு முக்கியத்துவமளிக்க வேண்டியதில்லை’



நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் சர்ச்சைக்குரிய நாடாளுமன்ற உரைக்கு அதிக முக்கியத்துவமளிக்க வேண்யடிதில்லை எனத் தெரிவித்துள்ள வல்பொல பியநந்த தேரர், சம்பந்தனைவிடத் தன்னை பாரிய இனவாதியாகக் காட்டிக்கொள்ள விக்னேஸ்வரன் முயற்சிக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் சர்ச்சைக்குரிய நாடாளுமன்ற உரை தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும், நாடாளுமன்றத்துக்குள்ளும் பரவலாகப் பேசப்படுகிறது எனவும் கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை விட, பாரிய இனவாதியாகத் தன்னை அடையாளப்படுத்தி, தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கே விக்னேஸ்வரன் முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவின் தமிழ்நாட்டில் தான் இருந்த காலத்தில், தன்னோடு இருந்தவர்கள் பலரும் இலங்கையின் பூர்வீக மொழி தமிழ் என்றே கூறியதாகவும் தெரிவித்த அவர், இதுபோன்ற கருத்துகளுக்கு அதிக முக்கியத்துவமளிக்க வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.

இதுபோன்ற கருத்துகளை தூக்கிப்பிடிப்பதால் இனவாதம் மேலும் அதிகரிக்குமெனக் கூறிய அவர், எனவே விக்னேஸ்வரனின் சர்ச்சைக்குரிய உரையை இத்தோடு மறந்துவிட வேண்டுமெனவும் அவர் இதன்போது கூறினார்.

## ‘அரசமைப்பில் தவறில்லை அரசியல்வாதிகளிடமே தவறு இருக்கிறது’



நாட்டிலுள்ள அரசமைப்பில் தவறுகள் இல்லை எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நாட்டிலுள்ள அரசியல்வாதிகளிடமே தவறு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கி, நாட்டை முன்நோக்கிக் கொண்டுப்போக முடியாது. நாட்டில் காணப்படும் அரசமைப்பிலேயே தற்போது வரையில் நாடு இயங்கிக் கொண்டிருக்கிறது எனவும் கூறினார்.

எனவே, அரசமைப்பில் தவறில்லை எனவும், நாட்டை ஆளும் அரசியல்வாதிகளிடமே தவறுகள் இருப்பதாகவும் கூறினார்.

## ‘புலம்பெயர் தொழிலாளர்களுக்கு இழப்பீடுகள் வழங்க வேண்டும்’



கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தொழில் வாய்ப்புகளை இழந்துள்ள புலம்பெயர் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தவும், அவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கவும் வேண்டுமென தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சர்வதேச தொழிலாளர் அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி சிம்ரித் சிங்குடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்தக் கோரிக்கையை அமைச்சர் முன்வைத்துள்ளார்.

இலங்கை தொழிலாளர்களின் பாதுகாப்பு, வீசாவைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றுக்கான செலவுகள் குறித்தும் அமைச்சர் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

மேலும், தொழிலாளர்களுக்கு வீசா பெறுவதற்கான வழிமுறைகளை எளிதாக்க வேண்டுமெனவும், சர்வதேச முறைக்கு ஏற்றவாறு இலங்கையின் தொழிற் சட்டங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## பூகோள ரீதியில் கொவிட் – 19 தொற்றாளர் தொகையை இந்தியா விஞ்சிவிட்டது

கொவிட்-19 தொற்றில் தனித்த நாளொன்றுக்கான அதிகபட்ச கொவிட்-19 தொற்று உயர்ச்சியை இந்தியா நேற்று பதிவுசெய்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவானது, கடந்த மாதம் 16ஆம் திகதி பதிவு செய்த 77,299 என்ற எண்ணிக்கையை, இந்தியாவின் 78,761 என்ற எண்ணிக்கை விஞ்சியுள்ளது.

அந்தவகையில், இந்தியாவில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 3,542,733ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 948ஆல் உயர்ந்து 63,498-ஆகக் காணப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 9.25 மணி வரையில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 5,977,624ஆகக் காணப்படுவதுடன், 182,772 பேர் கொவிட்-19-ஆல் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலானது, கடந்த 24 மணித்தியாலங்களில் 758 கொவிட்-19 உயிரிழப்புகளையும், 41,350 புதிய கொவிட்-19 தொற்றுக்களையும் பதிவுசெய்துள்ளது.

அந்தவகையில், உலகளாவிய ரீதியில் 25 மில்லியனுக்கும் அதிகமானோர் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், 841,000க்கும் அதிகமானோர் கொவிட்-19-ஆல் உயிரிழந்துள்ளனர்.

## ‘நாட்டின் பிரஜைகளுக்கு நில உரிமை இருக்க வேண்டும்’



நாட்டின் பிரஜைகள் அனைவருக்கும் நில உரிமை இருப்பதாகத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கை ஒரு சுயாதீன நாடு எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், “நாட்டின் பிரஜை என்கிறார்கள். ஆனால் நாட்டில் ஓர் அங்குல இடம்கூட சொந்தமில்லை. எப்போதும் அடிமையாகவே வாழ்கிறார்கள். இந்நாட்டின் பிரஜை என்றால், வாக்குரிமை, அரசியல் உரிமை இருக்குமாக இருந்தால், அவர்களுக்கு நில உரிமையும் இருக்க வேண்டும்” எனவும் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்த உரிமைகள் வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த அவர், இதற்காகத் தான் போராடத் தயாராக இருப்பதாகவும், இதன் பின்னால் இனவாதம் இருக்க முடியாது. இலங்கை ஒரு சுயாதீன நாடு எனவும் தெரிவித்தார்.

## ‘வடக்கு, கிழக்கு மக்கள் இனவாதிகளுக்கு சாட்டையடி கொடுப்பு’

இந்நாட்டை பிரித்தாள வேண்டுமென இனவாதம் பேசியவர்களுக்கும் தாங்கள்தான் ஆட்சியின், வெற்றியின் பங்காளிகள் என்றும் மேடைகளில் முழங்கியவர்களுக்கும் வடக்கு, கிழக்கு மக்கள், நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில், சாட்டையடி வழங்கியிருப்பதாக தமிழ் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.ஸீ. அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையின சமூகத்தை மட்டுமன்றி, பெரும்பான்மையின சமூகத்தையும் பிழையாக வழிநடத்திய அரசியல் தலைவர்களுக்கு, இத்தேர்தலில் மக்கள் நல்ல பாடங்களைப் புகட்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கிலும் கிழக்கிலும், தேசியம், கொள்கை, கோட்பாடு, தனித்துவம் என்று முழங்கியவர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளனர் எனவும், நாடாளுமன்ற தேர்தலில் அங்கஜன் இராமநாதன், வியாழேந்திரன், காதர் மஸ்தான் வெற்றிபெற்றிருப்பதினூடாக, இன அரசியலில் இருந்து மக்கள் தேசிய அரசியலுக்குள் தடம்பதித்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை இனங்கள் மாற்றத்தை நோக்கிப் பயணிப்பதாகவும், இனவாத அரசியலை சிறுபான்மை மக்கள் அடியோடு நிராகரித்திருப்பதும் தேர்தல் முடிவுகளில் தெரியவருகிறதெனவும், இனவாத அரசியலை யார் செய்தாலும் தமிழ் - முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்குமெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேவை**

ஹெரனையில் இரப்பர் தோட்டத்துக்கு பால் வெட்டுபவர்கள், கங்காணிகளும் தேவை

தொடர்புகளுக்கு 0779989388, 0773135544

#MemorableSteps2020

Lanka Alzheimer's Foundation

Memorable Steps உடன் இணையுங்கள் அல்செய்மர்ஸிற்கான இணையவழி பாதயாத்திரை

நீங்கள் எங்கிருந்தாலும் 91,000 அடிகளை (74km) 21 நாட்களுக்குள் நடந்திடுங்கள். அதாவது அனுராதபுரம் மற்றும் சிகிரியாவிற்கு இடையேயான தூரத்திற்கு ஒத்த தூரம்.

இவ்விணையவழி நடைபாதையில் இணைய, பின்வரும் படிமுறைகளை பின்பற்றுங்கள்

படி 1
பின்வரும் இணையத்தளத்தில் பதிவுசெய்துக்கொள்ளுங்கள்:
memorablesteps.ayubo.life

படி 2
உங்கள் கையடக்க தொலைபேசிக்கு அனுப்பப்பட்ட SMS இல் உள்ள லிங்கை க்ளிக் செய்து ayubo.life செயலியை பதிவிறக்கம் செய்யுங்கள்

படி 3
ayubo.life செயலிக்குள் சென்று உறுதிப்படுத்துவதற்காக உங்கள் தொலைபேசி இலக்கத்தை உள்ளீடு செய்யுங்கள்

படி 4
செயலியை Google fit அல்லது Apple Health உடன் இணைத்து எடுத்துவைக்கும் அடிகளை கணக்கிடும் செயற்பாட்டினை தொடங்கிடுங்கள்

படி 5
'Discover' tab இல் இருக்கும் 'Today' அல்லது Home Page இல் அல்லது 'Active Challenges' பிரிவின் கீழ் 'memorable Steps' இனை தெரிவுசெய்க

படி 6
சவாலில் கலந்துக்கொள்ளுங்கள்

MEMORABLE STEPS
1ST - 21ST SEPTEMBER 2020
LANKA ALZHEIMER'S FOUNDATION
VIRTUAL WALK

ayubo.life
LIVE HAPPY :)

இக்கோடினை ஸ்கேன் செய்து அல்லது apps.ayubo.life/download/ இங்கு பிரவேசித்து ayubo.life செயலியை பதிவிறக்கம் செய்துக்கொள்ளுங்கள்

தமிழ்Mirror ONLINE · Daily Mirror ONLINE · Hi!! · Wijeya Newspapers · DentsuGRANT · Lassana Flora · Life · First Capital · TV1 · LEGENDS 96.6 · Just Kidding · Maliban Inspiring Goodness

# பிடிவாதங்களின்றி பேச்சுகளே தீர்க்கமானது...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பின்னடைவுக்கான காரணங்களைக் கண்டறியக் குழு அமைக்கப்படவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இலங்கை தமிழரசுக் கட்சியின் பின்னடைவுக்கான தீர்வையே அவர்கள் கண்டறியவுள்ளார்கள். அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, இப்பொழுதேனும் தம்மைப் புடம்போட்டுப் பார்க்க முன்வந்திருப்பது வரவேற்புக்குரியதுதான். இதை அவர்கள் முன்னரே செய்திருந்தால், இந்நேரம் வேறு தளத்தில் அவர்கள் இயங்குவதற்கு வழி கிடைத்திருக்கும். ஆனால், அத்தகைய விட்டுக்கொடுப்புகளுடனான பேச்சுவார்த்தைக்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. அதன் விளைவையே அவர்கள் இப்போது சந்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

கூட்டமைப்பு, அல்லது தமிழரசுக் கட்சியின் வாங்குவங்கியில் பாரிய சரிவு ஏற்படுகிறது என்பதைப் பல சந்தர்ப்பங்களில், பலர் சுட்டிக்காட்டியிருந்தனர். இவை எதையுமே அவர்கள் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. வரட்டுப் பிடிவாதங்களும் தேவையற்ற சுய நம்பிக்கையும் அநாவசியமான நம்பிக்கையுமே தம் தலைமீது மண் அள்ளிப்போடக் காரணமாகியிருக்கின்றன என்பதை இப்போதாவது அதன் தலைமை புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதெல்லாம் அதனைத் தட்டிக்கழித்தவர்கள் தமிழரசுக் கட்சியினர்தான். அப்படியென்றால், தங்கள் வாக்கு வங்கியையாவது தமிழரசுக் கட்சி கூட்டியிருக்க வேண்டும். அதைவிடுத்துத் தம் பங்காளிக் கட்சிகளுடன் பகை வளர்ப்பதிலேயே நீண்ட காலத்தைச் செலவிட்டனர். இத்தகைய இறுக்கத்தின் பின்னணியில்தான், கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்கள் இன்று கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் தலைவரால் கூடத் தன்னுடைய வாக்கு வங்கியைத் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதுதான்.

தோல்வியிலிருந்து மீளவேண்டியது கட்டாயமானதுதான். ஆனால், பின்னடைவு ஏற்படுகிறதென்பதைத் தெரிந்தும் அதனைச் சீர்செய்யத் தவறியமை ஏற்புடையதல்ல. கூட்டமைப்பிலிருந்து ஒவ்வொருவராகப் பிரிந்து செல்கின்றபோதே அதனைத் தடுப்பதற்கான வழிகளைக் கையாண்டிருக்க வேண்டும்; பிடிவாதங்களற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களைத் தமிழரசுக் கட்சி ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்பதே கசப்பான உண்மை. ஒருவேளை அத்தகைய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தால், இந்நேரம் நிலைமை மாறியிருக்கக்கூடும்.

இனியும் காலம் கடந்துவிடவில்லை. தம்மைவிட்டுச் சென்றவர்களுடன் விட்டுக்கொடுப்புடனான பேச்சுகளை மேற்கொள்ளத் தமிழரசுக் கட்சி முன்வர வேண்டும். தம் பங்காளிக் கட்சிகளிடையே நல்லுறவை வளர்த்துக்கொள்வதனூடாகவே எதிர்காலத்தில் நிலைமையைச் சமாளிக்க முடியுமென்ற யதார்த்தத்தையாவது தலைமை புரிந்துகொள்வது கட்டாயமாகிறது.

தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD, COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6, 011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER (DIR.) 011 2 479 822, 077 3421 476
CIRCULATION MANAGER (DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER (DIR.) 2 479 626, 2 479 628, 077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk



# பேய்க்கும் பேய்க்கும் சண்டை



என்.கே. அஷோக்பரன்

நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் சொன்ன ஒரு விடயம், பல அரசியல்வாதிகளையும் அல்லோலகல்லோலப்பட வைத்திருக்கிறது.

புதிய நாடாளுமன்றம் கூடிய நாளிலிருந்து இன்றுவரை இதுதான் பரபரப்பான செய்தி. சீ.வி. விக்னேஸ்வரன் சொன்னதும், அதற்கான சிலரின் ஆதரவும் சிலரின் எதிர்வினைகளும் சிலரின் பட்டவர்த்தனமான மௌனங்களும் அவர்களது உண்மை முகங்களைக் கொஞ்சம் வெளிச்சத்தில் காட்டுவதாக அமைந்துவிடுகிறது.

எல்லோரும் பரபரப்பாகும் அளவுக்கு, நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரன் அப்படி என்னத்தைச் சொல்லிவிட்டார்? நாடாளுமன்றத்தில் தனது உரையைத் தமிழில் ஆரம்பித்த அவர், “இலங்கையின் ஆதிக்குடிகளின் மொழியில் பேசுகிறேன்” என்றார். இதுதான், இத்தனை பரபரப்புக்கும் காரணமான பேச்சு.

கட்சிபேதமில்லாமல் சிங்கள-பௌத்த தேசியவாதிகள் சீ.வி.விக்னேஸ்வரனின் இந்தப் பேச்சைக் கண்டித்து வருகிறார்கள். அத்தனை கண்டனங்களைப் பெறுமளவுக்கு இந்தப் பேச்சு, பிழையான பேச்சா என்று நீங்கள் ஆச்சரியப்பட்டால், இலங்கையின் அரசியல் பற்றியும் சிங்கள-பௌத்த இனத்தேசியவாதம் பற்றியும் இன்னும் ஆழமான புரிதல் தேவைப்படுகிறது என்று அர்த்தம்.

இலங்கையின் புகழ்பூத்த வரலாற்று ஆய்வாளர்களில் குறிப்பிடத்தக்கவரான கே.எம். டி சில்வா, இலங்கையின் பெரும்பான்மையினத்தவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, “சிறுபான்மையினரின் மனோநிலையைக் கொண்ட பெரும்பான்மையினர்” என்பார்.

சிறுபான்மையினருக்கு, தாம் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால், தமது அதிகாரமும் பலமும் குறைவாக இருக்கும் என்பதால், தம்முடைய இருப்புப் பற்றிய அச்சமும் பாதுகாப்பின்மையும் எப்போதும் இருந்துகொண்டேயிருக்கும். இந்தப் பாதுகாப்பின்மை உணர்வு, அவர்களை எப்போதும் ஓர் அதீத தற்பாதுகாப்பு நிலையில் நிற்கவைத்திருக்கும். இலங்கையைப் பொறுத்தவரையில், இந்தச் சிறுபான்மை மனநிலை, பெரும்பான்மையினத்திடம் இருப்பதாக கே.எம். டி சில்வா கருத்துரைக்கிறார்.

தமது இருப்பு, அடையாளம் பற்றிய பாதுகாப்பின்மை உணர்வால், அவர்கள் அதிதீவிர தற்பாதுகாப்பு மனநிலையில் செயற்படுவார்கள். பொதுவாக, அரசமைப்பு ரீதியிலான பாதுகாப்புகளைச் சிறுபான்மையினர்கள்தான் வேண்டி நிற்பார்கள். பெரும்பான்மையினர் ஆதிக்கமுள்ள நாடொன்றில் தமது மொழி, மதம், கலாசாரம், அடையாளம் என்பவற்றைப் பாதுகாக்கவும் தமது இருப்பை உறுதிப்படுத்தவும் இந்த அரசமைப்பு, சட்டப்பாதுகாப்புகள் அவசியம் என்று சிறுபான்மையினர் உணர்கிறார்கள்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை, இந்தப் பாதுகாப்புகளைப் பெரும்பான்மையினத்தவரே பெரிதும் வேண்டி நின்றிருக்கிறார்கள். தமது மதத்துக்கும் மொழிக்குமான பாதுகாப்பு, முன்னுரிமையை அரசமைப்பு ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் முன்வைப்பதில் அவர்களே கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டிருக்கிறார்கள்.

இது பற்றிக் கருத்துரைக்கும் இன்னொரு வரலாற்றாய்வாளரான நீரா விக்கிரமசிங்க, பெரும்பான்மையின அடையாளங்களைப் பாதுகாப்புப் பொறிமுறைகள் மூலம் ஒன்றுபடுத்தியமையைத்தான் பலரும் சிறுபான்மையின மனநிலையையுடைய பெரும்பான்மையினம் என்று விளிக்கக் காரணம் என்கிறார்.

சீ.வி.விக்னேஸ்வரனின் பேச்சு, இந்தச் சிறுபான்மையின மனநிலையையுடைய பெரும்பான்மையினத் தேசிய அரசியலின் மிக முக்கியமான பாதுகாப்பின்மை உணர்வை உந்தியெழச் செய்ததுதான் அவர் சொன்ன ஒரு வரி.

நிற்க! இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தாம்தான் என்று நிறுவுவதே ‘சிங்கள-பௌத்த’ இனத்தேசியவாதம் முன்னெடுத்த முக்கிய பணியாக இருந்து வருகிறது. ஆனால், அவர்கள் வரலாறு என்று நம்பிய வரலாறே, அவர்களுக்கு உதவுவதாக இல்லை என்பதை, அண்மைக்காலங்களில் வெகுவாக உணர்ந்ததன் விளைவுதான், இன்று புதிய வரலாறுகளைத் தேடி அவர்கள் பயணித்துக் கொண்டிருப்பதன் காரணம்.

இன்றும் கூட, மகாவம்சம்தான் சிங்களவர்களின் வரலாறு. ஆனால், அது சிங்கள இனத்தின் தோற்றத்தை, விஜயனின் வருகையோடு தொடங்குகிறது. வங்கம், ஒடிசாவிலிருந்து வந்த இளவரசன் விஜயன். கி.மு 543 காலகட்டத்தில் இலங்கைத் தீவை வந்தடைகிறான். விஜயன் வங்காளி; அவன் மணம்புரிந்தது மதுரை இளவரசி. அவர்களது சந்ததியினரே சிங்களவர்கள் எனப்பட்டார்கள்.

இதற்கும் சில நூற்றாண்டுகள் கழித்துத்தான் பௌத்தம் இலங்கைக்கு வருகிறது. அப்படியானால் விஜயனுக்கு முன் இந்தத் தீவில் வாழ்ந்தவர்களை மகாவம்சம் கூறுவது போல இயக்கர்கள், நாகர்கள் என்று குறிப்பிடுவதுடன் வரலாறு கைவிடப்பட்டுவிடுகிறது. அவர்கள் பேசிய மொழி என்ன, அவர்களது அயல்நாடுகளுடன், அவர்கள் கொண்டிருந்த உறவு என்ன என்பதெல்லாம் பற்றி பேசப்படுவதில்லை.

ஆதி தமிழ், 5,000 ஆண்டுகள் அளவுக்குப் பழைமையானது என்று குறிப்பிடும் மொழியியல் ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். எது எவ்வாறாயினும், கி.மு.300களில் செழுமையான இலக்கியங்களைக் கொண்ட மொழியாகத் தமிழ் இருந்திருக்கிறது என்பதற்குச் சான்றுகள் உண்டு.

இந்த வரலாற்று விடயங்கள் எல்லாம்தான், இன்று “இராவணன் சிங்களவன்” என்கிற புதிய புனைவுக்குச் சிங்கள-பௌத்த தேசியவாதிகளை இழுத்துச் சென்றிருக்கிறது. விஜயனின் கதை அவர்களுக்கும் போதுமான பயன்தரு கடந்தகாலத்தைத் தரவில்லை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நிற்க!

யார் முதலில் வந்தார்கள், யார் வந்தேறு குடிகள் என்பதெல்லாம் அவசியமில்லாத விடயங்கள். இன்றைப் பற்றிப் பேசுவோம் என்று சிலர் கருத்துரைக்கிறார்கள். அவர்கள் சொல்வதில் அர்த்தமில்லாமல் இல்லை. ஆனால், கடந்த தேர்தலின் பின்னர், இலங்கை அரசியலின் களம் மாறியிருக்கிறது என்பதை, ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

கடந்த தேர்தலில், தோல்வியையும் பின்னடைவையும் சந்தித்தவர்கள் சிங்களவர்களோ, தமிழர்களோ அல்ல; மாறாக, இன அடையாளங்களைக் கடந்து, தாராளவாதிகள் தோல்வி அடைந்திருக்கிறார்கள். சீ.வி. விக்னேஸ்வரனின் கருத்துக்குக் கங்கணம் கட்டிக்கொண்டு கண்டனம் வெளியிட்டவர்கள் ராஜபக்‌ஷக்கள் அல்ல; மாறாக, சஜித் பிரேமதாஸவின் கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்களே, ராஜபக்‌ஷ தரப்பை விடக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

எங்களில் யார் மிகப் பெரிய ‘சிங்கள-பௌத்த’ தேசியவாதி என்ற போட்டியில், ராஜபக்‌ஷக்களை வீழ்த்த, சஜித் பிரேமதாஸ தரப்பு, படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறது. சீ.வி.விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக, கஜேந்திரகுமார் மட்டுமே நின்றார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

தீவிர தமிழ்த் தேசியவாதிகள் எனப்பட்ட இந்த இருவரும்தான் இந்த விடயத்தில் ஒன்றிணைந்து நிற்கிறார்கள்.

சஜித் பிரேமதாஸ தரப்பில், அவருக்கு ஆதரவாக இருந்த தமிழ் அரசியல்வாதிகள் அமைதியாக இருக்கிறார்கள். அவர்கள், தமிழ்த் தேசியவாதிகள் அல்ல; ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அமைதியாகவே இருக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டியது. இனத் தேசியவாதச் சண்டைகளுக்குத் தாம் தயாரில்லை என்ற நிலைப்பாட்டை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுத்துள்ளது போலும்.


தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் அரசியலில் தாராளவாத அரசியல் முகமாகத் தன்னை முன்னிறுத்தி உள்ளது. ‘பெடரல் பார்ட்டி’, ‘லிபறல் பார்ட்டி’யாக மாறியுள்ளது. ஆனால், இந்தப் போட்டியில் ‘லிபறல்’களுக்கு இடமில்லை. இது இனத்தேசியாவதிகளுக்கும் இனத்தேசியவாதிகளுக்கும் இடையிலான போர். 2020 நாடாளுமன்றத் தேர்தல் இலங்கையின் அரசியல் களத்தை மீண்டும் இனத்தேசியவாதங்களுக்கு இடையிலான சண்டையாக மாற்றியுள்ளது.

இது ஆரோக்கியமானதொன்றல்ல. இலங்கை அரசியல் சந்தர்ப்ப சூழல்சார்ந்து கொலனித்துவ காலகட்டத்திலேயே இன ரீதியில் பிளவடையத் தொடங்கியது. சுதந்திரத்துக்குப் பின்னர், எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் ‘சிங்கள-பௌத்த’ பெரும்பான்மையின முன்னுரிமை, என்ற இனப்பிளவு அரசியல், சுதந்திர இலங்கையில் இனத்தேசிய அரசியலாக உருவெடுத்து, ஆயுதப்போராட்ட காலத்தைச் சந்தித்து, இன்று ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்னரும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. “இலங்கையின் இனத்தேசிய அரசியலின் விளைவாக, வளமடையும் சாத்தியமுள்ள நாடு வீணாவதைக் கண்டேன்” என்று சிங்கப்பூரின் சிற்பி லீ க்வான் யூ பதிவுசெய்த கருத்து இங்கு முக்கியமானது.

இங்கு, சீ.வி.விக்னேஸ்வரனை அரசியல் காழ்ப்புணர்வின் காரணத்தால் குறைசொல்வது பொருத்தமானதல்ல. அவர் சொன்னது, அவசியமா என்பதை விட. அதைச் சொல்வதற்கு, அவருக்கு இருக்கும் உரிமை மதிக்கப்பட வேண்டும் என்பது முக்கியமானது.

பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் மனநிலையில் செயற்படும்போது, சிறுபான்மையினர் சிறுபான்மையினருக்கேயுரிய பாதுகாப்பின்மையின் காரணத்தால், தமது அடையாளத்தையும் இருப்பையும் பாதுகாத்துக்கொள்ள அதே மனநிலையில் செயற்படுவதில் எப்படிப் பிழை காண்பது?

இந்தத் தீவில் இனத்தேசிய அரசியல் தமிழ் மக்களால் தொடங்கப்படவில்லை. தமிழ்த் தேசியம் என்பது, ஏ.ஜே. வில்சன் குறிப்பிடுவது போல, ‘சிங்கள-பௌத்த’ தேசியவாதத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளும் தற்காப்புத் தேசியமாகவே பிறந்தது. இங்கு இனத்தேசியம் இல்லாதுபோய், சிவில் தேசியமொன்று கட்டியெழுப்பப்பட வேண்டுமென்றால், அதற்கான முதற்படியை பெரும்பான்மையினமே நல்லெண்ணம் கொண்டு முன்னெடுக்க வேண்டும். அந்த முன்னெடுப்புக்குக் கைகொடுக்கத் தமிழ்த் தேசியத்தின் தாராளவாதிகள் எப்போதும் தயாராகவே இருப்பார்கள்.



## வாழ்வியல் தரிசனம்

காதல் திருமணங்கள் குறித்து, சங்க இலக்கியங்களில் வெகுவாகப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. காதலிப்பது ஒன்றும் தவறல்ல; தூய்மை, ஒழுக்கத்துடனான காதல் பற்றியே இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளன.

ஆனால், தற்காலத்தில் வாழ்க்கை முறையே மாறிவிட்டது. முன்னைய கலாசாரத்துடன் ஒழுகி, வாழ்வியல் முறைமைகளைத் தழுவி, ஒழுக்க நெறிகளைப் பின்பற்றியா, நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? இந்தக் கேள்வியை எமக்குள் கேட்டேயாக வேண்டும்.

பண்டைக் காலத்தில், வீரம்மிகு ஆண்களையே பெண்கள் விரும்பினர். காளையை அடக்குதல், போர்க்கலை, நாட்டுப்பற்று உள்ளவர்களையே அக்கால மாந்தர்களும் போற்றினர்.

தற்காலத்தில், சீதனம், பதவி, பந்தாக்களுக்காகவே திருமணப் பேச்சுகள் நடக்கின்றன. இருமனங்கள் இணையும் திருமணத்தைப் பேரம்பேசி விலைபேசுதல், ஆறறிவு படைத்தவன் செயலும் இல்லை.

காதலித்துப் பின்னர், காசைக் கண்டால், வேறு பெண்ணை மணப்பது, தற்காலத்தில் சர்வசாதாரணம் ஆகிவிட்டது. எல்லாக் காதலரையும் அப்படிச் சொல்லிவிட முடியாது.

ஒழுக்கம் கெட்டவர்களுக்கு காதல் சரிப்பட்டு வராது; இவர்கள் இல்லறத்தில் ஏற்புடையவர்களும் அல்லர். காதல் தூய்மையானது; அதை உணர்க.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாடசாலை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

திருகோணமலை மாவட்ட சேருவில பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட நாவற் கேணிக்காடு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள செல்வ நகர், அல் - அமான் வித்தியாலயத்துக்குச் செல்லும் வீதியானது சேதமடைந்து காணப்படுவதால், இவ் வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இவ்வீதியில் போடப்பட்டுள்ள சீமெந்துக்கற்கள் கழண்டும் சேதமடைந்தும் உள்ளதால், இவ்வீதியால் பொதுமக்களும் வாகனங்களும் சென்றுவரமுடியாத நிலைகாணப்படுகின்றது. இதனால் இவ் வீதியூடாகத் தினமும் பாடசாலைக்குச் சென்று வரவேண்டிய பாடசாலை மாணவர்கள் சிரமப்படுவதோடு, பள்ளிவாசலுக்கும் இவ்வீதியால் சென்றுவர வேண்டிய பொதுமக்களும் பெரிதும் சிரமப்படுவதாகக் கூறுகின்றனர்.

பொதுமக்களின் இத்தகைய சிரமங்களைக் கருத்திற்கொண்டு, இவ்வீதியைக் காலம்தாழ்த்தாது புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் உரிய பகுதியினரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.


எஸ்.எல். நௌபர்




## வாராந்த பங்கு சந்தை நிலைவரம்



**24.08.2020 -28.08.2020**




**24.08.2020**

டிஸ்டிலரீஸ், நெஸ்லே லங்கா மற்றும் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.5 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு DFCC வங்கி மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு லங்கா மில்க் ஃபுட்ஸ், LOLC ஹோல்டிங்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு டோக்கியோ சீமெந்து வாக்குரிமையற்ற பங்குகள் மற்றும் ஹேலீஸ் ஃபப்ரிக் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் குறைந்தளவில் ஈடுபட்டனர்.

**25.08.2020**

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், LOLC ஹோல்டிங்ஸ் மற்றும் பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் ஆகியவற்றின் பங்களிப்புடன் சுட்டிகள் மறைப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 2.0 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு மெல்ஸ்டாகோர்ப், கொமர்ஷல் வங்கி மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் ஆகிய பங்குகள் மீது பதிவாகியிருந்தன. LOLC ஹோல்டிங்ஸ் மற்றும் DFCC வங்கி பங்குகள் மீது கலப்பு ஈடுபாடு பதிவாகியிருந்தது. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு லங்கா மில்க் ஃபுட்ஸ், பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் மற்றும் ஹேலீஸ் ஃபப்ரிக் ஆகிய பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

**26.08.2020**

LOLC ஹோல்டிங்ஸ், பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் மற்றும் லங்கா ஒரிக்ஸ் ஃபினான்ஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் மறைப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.8 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு அக்சஸ் என்ஜினியரிங் மற்றும் DFCC வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ், எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் மற்றும் டயலொக் அக்சியாடா பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு பிரமல் கிளாஸ் மற்றும் பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

**27.08.2020**

கொமர்ஷல் வங்கி, LOLC ஹோல்டிங்ஸ் மற்றும் டில்மா சிலோன் டீ கம்பனி ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புடன் சுட்டிகள் மறைப் பெறுமதிகளைப் பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 2.2 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு கொமர்ஷல் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் லங்கா மில்க் ஃபுட்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ், சம்பத் வங்கி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு மெல்ஸ்டாகோர்ப், டோக்கியோ சீமெந்து கம்பனி வாக்குரிமையற்ற பங்குகள் மற்றும் களனி டயர்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் அதிகளவு ஈடுபட்டனர்.

**28.08.2020**

காகில்ஸ், டயலொக் அக்சியாடா மற்றும் கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் அபவிசுட்டி மறைப் பெறுமதியையும், S&P SL20 சுட்டி நேர் பெறுமதியையும் பதிவு செய்திருந்தன. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு டோக்கியோ சீமெந்து வாக்குரிமையற்ற பங்குகள், களனி டயர்ஸ் மற்றும் LOLC ஹோல்டிங்ஸ் ஆகிய பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு அக்சஸ் என்ஜினியரிங் மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் மற்றும் டயலொக் அக்சியாடா பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் அதிகளவு விற்பனையில் ஈடுபட்டனர்.

வாரத்தில் அபவிசு 1.14% சரிவையும் S&P SL20 1.41% சரிவையும் பதிவு செய்திருந்ததுடன், சராசரி தினசரி புரள்வு 1.7 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்தது.





# தொங்கி நிற்கும் பொருளாதார இலக்குகள்

அநுதினன் சுதந்திரநாதன்

நல்லாட்சி அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட ‘ Vision 2025’ இலக்குகளை, இன்று நினைவில் வைத்திருக்கிறோமா ?

2020இல் அடையக்கூடிய இலக்குகள் என, 2015இல் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும், இடைநடுவே ஏற்பட்ட அதிகார மோதலின் காரணமாக, இவை அனைத்துமே, 2025ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு மாற்றியமைக்கப்பட்டு இருந்தன.

தற்போது, 2020இல் யாருமே எதிர்பாராத வண்ணம், அன்று எதிர்த்தரப்பில் இருந்தவர்கள், ஆளும் தரப்பாக மாறியிருக்கிறார்கள். அதுமட்டுமா ? மூன்றில் இரண்டு என்கிற அசுரபலத்துடன் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இந்தநிலையில், கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக, நீண்டகால அடிப்படையில் திட்டமிடப்பட்ட நாட்டின் பொருளாதார இலக்குகளும் அபிவிருத்தித் திட்டங்களும் என்ன ஆகுமென, நாம் நினைத்து பார்த்தது உண்டா ?

தொடர்ச்சியாகப் பொருளாதாரம் தொடர்பான எதிர்வினைச் செய்திகள், இலங்கை அரசின் பொருளாதார வளர்ச்சியையும் அதன் திட்டங்களையும் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

2025ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட இலக்குகளில் முதன்மைக் குறிக்கோள், ‘இலங்கையைச் செல்வந்த நாடாக மாற்றியமைப்பதன் மூலம், இந்து சமுத்திரத்தின் மய்யமாக மீள உருவாக்குவதுடன், இதை அடிப்படையாகக்கொண்டு, அறிவுசார் ரீதியில் போட்டித்தன்மைமிக்க சமூக பொருளாதார சூழலை உருவாக்க வேண்டும்’ என்பதாகும்.

இந்தப் பரந்த குறிக்கோளுக்குள் பல்வேறு சிறிய, வாக்குறுதி அளிக்கப்பட்ட இலக்குகள் உள்ளடங்கி இருக்கின்றன.

### இலக்குகள் எதை நோக்கியனவாக இருக்கின்றன?

2025ஆம் ஆண்டை நோக்கியதாக, அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள இலக்குகள், சரியான திட்டமிடல்கள் இல்லாத வாக்குறுதிகள் என்றே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இவை, கடதாசியில் வெறுமனே, கவர்ச்சிகரமான தலைப்புகளுடன் அச்சடிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த இலக்கை அடைந்துக்கொள்ள, மிக நீண்டகாலம் இருக்கின்ற போதிலும், அதை அடைவதில், அரசாங்கத்தின் திட்டமிடல் என்பது பூச்சிய நிலையிலேயே இருக்கிறது.

தற்போதைய புதிய அரசாங்கம், தனக்கெனப் புதிய திட்டங்களைக் கொண்டுவந்து, நடைமுறையிலிருக்கும் திட்டங்களை இல்லாமல் செய்கின்ற நிலையில் இல்லை. காரணம், அதற்கு இலங்கையின் பொருளாதார நிலை இடம் கொடுக்காது. கூடவே, கொரோனா வைரஸின் பாதிப்பும் இலங்கையின் பொருளாதாரத்தைப் புரட்டிப் போட்டிருக்கிறது.

அத்துடன், இந்த அரசாங்கம் நம்பியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதே திட்டங்களைப் புதிய பெயர்களுடன் நடைமுறைப்படுத்தப்படுமே தவிர, மிகப்பெரிய அளவிலான புதிய திட்டங்களையோ, மறுசீரமைப்பையோ நாம் எதிர்பார்க்க முடியாது.

2025ஆம் ஆண்டில் அடையப்படக்கூடிய, பட்டியல்படுத்தப்பட்ட இலக்குகளான வெளிநாட்டு நேரடி முதலீடு, ஏற்றுமதி வருமானம், சுற்றுலாத்துறை வருமானம், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என்பவை தொடர்பான இலக்குகள், அடையமுடியாத இலக்குகளாகவே, தற்போதைய நிலையில் இருக்கின்றன.

இதற்கு, 2020இல் உலகளாவிய ரீதியில் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸின் தாக்கம் ஒரு காரணமெனினும் 2019இல் நம்மைப் பாதித்த ஈஸ்டர் தின குண்டுவெடிப்புகளும் அதன் தொடர்ச்சியும் இன்னோர் காரணியாக இருக்கிறது.

2025ஆம் ஆண்டை நோக்கிய முக்கிய இலக்குகளில் ஒன்று, வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கணிசமான அளவில் அதிகரிப்பதாகும். பொதுவாகவே, ஒரு நாட்டின் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிப்பதன் மூலமாக, ஏற்றுமதியை ஊக்குவிக்க முடிவதுடன், சென்மதி நிலுவையைச் சீர்படுத்தி, வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். இந்தப் பிரதான இலக்கை அடைவதன் மூலமாக, உப-இலக்குகளை அடைவதற்கு சாதகமான வழிமுறைகள் உருவாகும்.

ஆனால், இலங்கையால் முன்வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தொடர்பான பிரதான இலக்கே, இன்றைய நிலையில், எப்படி அடைய முடியும் என்கிற கேள்வி, எல்லோரிடமும் எழுந்திருக்கிறது. இந்த இலக்குகளின் பிரகாரம், 2020ஆம் ஆண்டுக்குள் வெளிநாட்டு நேரடி முதலீடு, சுமார் ஐந்து பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்ட வேண்டும். இது எந்தவகையிலும் சாத்தியப்படக்கூடிய ஒன்றல்ல.

இலங்கையில் போர்முடிவுக்கு வந்த காலப்பகுதியான 2010-2014இலும் நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த 2015-2016 வரையான காலப்பகுதியிலுமே, நம் நாட்டின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் அளவு சராசரியாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலராக இருந்திருக்கிறது.

ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிநாடு நேரடி முதலீட்டின் அளவைச் சரியாகக் கணிப்பிடுவோமாயின் அது, 700மில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே இருந்திருக்கிறது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பாதிப்பால் சுமார் 4-6 மாதங்களுக்கு மேலாக, எந்தவிதமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் கொண்டிராத நாம், எப்படி இதையடைந்து கொள்ள முடியும்? எனவே, இந்த இலக்குகள் மறுசீரமைக்கப்படுவதைத் தவிர, வேறு எந்தவிதமான தீர்வையும் காண முடியாது.

> **2025ஆம் ஆண்டை நோக்கியதாக, அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள இலக்குகள், சரியான திட்டமிடல்கள் இல்லாத வாக்குறுதிகள் என்றே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள் இவை, கடதாசியில் வெறுமனே, கவர்ச்சிகரமான தலைப்புகளுடன் அச்சடிக்கப்பட்டு இருக்கின்ற**
>
> **வெளிநாடு நேரடி முதலீட்டின் அளவைச் சரியாகக் கணிப்பிடுவோமாயின் அது, 700மில்லியன் அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே இருந்திருக்கிறது**
>
> **இலங்கைக்குள் வருகின்ற சுற்றுலாப் பயணிகளும் வருமானமும் அதிகரித்திருந்த போதிலும், 2019/20 ஆண்டுகளில் மீளவும் பூச்சிய நிலைக்கே சென்று விட்டோம் என்பதே உண்மையாக இருக்கிறது**

இலங்கை அரசாங்கத்தின் திட்டமிடல் குழு, குறைந்தது 2020ஆம் ஆண்டில் பாதீட்டில் துண்டுவிழும் தொகையைக் குறைக்கக் கூடிய அளவுக்கோ, புதிய அரசாங்கத்தின்பால் நம்பிக்கையை ஏற்படுத்தி, அதன் மூலமாக சீனா மட்டுமின்றி, ஏனைய நாடுகளின் முதலீடுகளையும் ஈர்க்க கூடிய திட்டங்களை வகுக்குமாயின், அது இன்றைய சூழலை அடிப்படையாகக்கொண்டு அடையப்படக் கூடியதும், நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் இருக்கும் எனக் கூறமுடியும்.

இலங்கையின் ஏற்றுமதிகளில் சாதகமானநிலைமை தென்படும் சமயத்தில் 2025ம் ஆண்டுக்கான இலக்குகளில் ஏற்றுமதி தொடர்பிலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதன் அடிப்படையில் தற்போதுஇ சராசரியாக 10 பில்லியன் அமெரிக்க டொலருக்கு அண்மையாகவுள்ள ஏற்றுமதிகளை இரண்டு மடங்காக 20 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மாற்றவேண்டும் என இலக்கிடப்பட்டு உள்ளது.

இந்த இலக்கை அடைவது, ஒன்றும் இலகுவானதல்ல. ஆனால், தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கம், ஒட்டுமொத்த இலங்கைக்கும் சம அடிப்படையில் வளங்களைப் பங்கீடு செய்கின்றபோது, இந்த இலக்கை அடைய முடியும். பாதீடுகளில், வடக்கு, கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை, வெறுமனே கடதாசியில் கொண்டிருக்காமல், அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலமாக, புதிய வருமானங்களை உறுதி செய்ய முடியும். ஆனால், இந்த அரசாங்கம் இவற்றைச் செய்வதற்கு முன்னிற்குமா, என்கிற கேள்வியில்லாமல் இல்லை.

அத்துடன், ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் திட்டம் என்பது, மறைமுகமாக, வெளிநாட்டு நேரடி முதலீடுகளை இலங்கைக்குள் கொண்டுவருகின்ற உத்தியாகும். இதற்கு, ஏற்றுமதியில் பல்வகைமைத் தன்மையை பேணுதல் அவசியமாகும். காரணம், இலங்கையின் ஏற்றுமதித் துறையில் பெருமளவிலான வருமானம், விவசாயத்துறை சார்ந்த ஏற்றுமதி மூலமாகவே வருகின்றது. அதிலும், சில குறிப்பிட்ட உற்பத்தி பொருள்களில்தான் இந்த ஏற்றுமதியும் தங்கியுள்ளது.

எனவே, இரட்டிப்பு வருமானம் என்கிற திட்டமிடலைக் கொண்டுள்ள நிலையில், எதிர்காலத்துக்கும் சேர்த்து, இந்தச் சிறிய ஏற்றுமதி வட்டத்துக்குள் தங்கியிருப்பது என்பது நடைமுறைக்கு ஒப்பானதல்ல. எனவே, ஏற்றுமதியில் பல்வகைத்தன்மையை, இலங்கை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவருவதும் அவசியமாகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில், தற்போதுள்ள குழப்பமான பொருளாதாரக் கொள்கைகளை வைத்துக்கொண்டு, முதலீட்டாளர்களைக் கவருதல் கடினமானதாகும். எனவே, திட்டமிடல்கள் மட்டுமின்றி, அவற்றை நடைமுறைபடுத்துவது தொடர்பிலும் சிந்திப்பது அவசியமாகிறது. எனவே, 2025ஆம் ஆண்டுக்கான இலக்குகளை அடைய, ஏற்றுமதி தொடர்பிலும் நிதிக் கொள்கைகள் தொடர்பிலும் நிறையவே மாற்றங்களைச் செய்யவேண்டியதாக இருக்கிறது.

கடந்த காலத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, 2025ஆம் ஆண்டுக்கான, இலங்கையின் இலக்கு திட்டமிடப்பட்டு இருந்தாலும், நடைமுறை அதற்கு நேரெதிராகவே இருக்கிறது. 2017ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களிலும், இலங்கை அரசாங்கத்தின் சுற்றுலாத்துறை மூலமான வருமானம், இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமாகும்.

கடந்த இரண்டரை வருடங்களில், இலங்கைக்குள் வருகின்ற சுற்றுலாப் பயணிகளும் வருமானமும் அதிகரித்திருந்த போதிலும், 2019/20 ஆண்டுகளில் மீளவும் பூச்சிய நிலைக்கே சென்று விட்டோம் என்பதே உண்மையாக இருக்கிறது.

வர்த்தக சம்மேளனத்தின் அறிக்கைகளின் பிரகாரம், சுற்றுலா பயணிகளின் வருகை தொடர்பிலான கணிப்பீட்டில் குறைபாடுகள் உள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், சுற்றுலா பயணிகளுக்கான உபசரிப்பு வர்த்தகமும் சிக்கலை எதிர்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து, சுற்றுலா பயணிகளுக்கான சுற்றுலா விடுதிகளின் தரம், போதுமானதாகவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாதபட்சத்தில், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் மட்டுமல்ல, வருமானத்திலும் அதிரிப்பை ஏற்படுத்த முடியாது. நிலைமைகள் சீரடைந்து, சுற்றுலா பயணிகள் நாட்டுக்குள் வருகின்றபோது, மேற்கூறிய உட்கட்டமைப்பு வசதிகளில் மாற்றம் அவசியமானது. இல்லையெனில், நாட்டின் பொருளாதாரம் மிகப்பாரிய பாதிப்பைச் சந்திக்கும்.

இன்றைய நிலையில் இலங்கைக்குத் தேவையானது, பொருளாதார வளர்ச்சிக்கான தெளிவானதும் நிலையானதுமான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதாகும். இதன்போது, பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக் கூடிய கொள்கைகளை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும்.

2025ஆம் ஆண்டை நோக்கிய இலக்குகளிலும் இது சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. அதில், ‘இலங்கை அரசாங்கம் தான் உருவாக்கும் கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றைத் திறன்மிகு வகையில் நடைமுறைப்படுத்தாதன் விளைவாகப் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கிறது. எனவே, இந்த இலக்குகளை அடைய ஸ்திரமான ஒருங்கிணைப்பும் கட்டுப்பாடுகளும் கொண்ட நடைமுறைபடுத்தல் அவசியம் என்பதனை இவ்வரசு உணர்ந்துள்ளது’ என குறிப்பிட்டிருப்பது வேடிக்கையானது.

எனவே, இந்த உண்மைகளை உணர்ந்துகொண்டு, தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கம் செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது. இல்லையெனில், மக்களின் விரக்தியையே அவர்கள் சம்பாதித்துக்கொள்ள முடியும்.

இல்லாவிடின், நாட்டின் அபிவிருத்தி என்பது 10 வருடங்கள் தாண்டியும் அதே நிலையில்தான் இருக்குமென்பதே உண்மை.



## ஷில்பா மஞ்சுநாத்
# கிளாமரில் அதிரடி

‘எமன்’, ‘காளி’, ‘இஸ்பேட்ட ராஜா இதய ராணி’ உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்துள்ள ஷில்பா மஞ்சுநாத், பெங்களூருவை சேர்ந்த மொடல் ஒருவர் ஆவார். தமிழ்த் திரைப்படங்களில் நடிப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்.

இஸ்பேட்ட ராஜா படத்தைத் தொடர்ந்து, தனக்கு நிறைய படவாய்ப்புகள் வரும் எனக் காத்திருந்தார். ஆனால், கொரோனா பிரச்சினை காரணமாகத் திரைத்துறை முடங்கியதால், ஷில்பாவும் பெங்களூருவில் உள்ள வீட்டில் ஓய்வெடுத்து வந்தார்.

மீண்டும் சினிமா படப்பிடிப்புகளை ஆரம்பிக்க இந்திய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதை அடுத்து, திரைத்துறையினர் படப்பிடிப்புகளை ஆரம்பிக்க ஆயத்தமாகி வருகின்றனர்.

எனவே, தானும் ஆட்டத்துக்கு ரெடி என அறிவிக்கும் வகையில், கடந்த சில நாள்களாக, தனது கிளாமர் படங்களை சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்து வருகிறார்.

அதைப் பார்த்த இரசிகர்கள், “ரைடக்டர்ஸ் நோட் பண்ணுங்க ப்ளீஸ்” என, சிபாரிசு செய்து வருகின்றனர்.



## நயன்தாராவின் மூக்குத்தி அம்மன்;
# ODDஇல் ரிலீஸ்?

தமிழ் சினிமாவில் தற்போது ஓடீடீ மோகம் அதி தீவிரமாகப் பரவி வருகிறது. ஏற்கெனவே ஜோதிகாவின் “பொன்மகள் வந்தாள்”, கீர்த்தி சுரேஷின் “பெண்குயின்” உள்ளிட்ட திரைப்படங்கள் நேரடியாக ஓடீடீயில் வெளியான நிலையில், சூர்யாவின் “சூரரைப் போற்று” திரைப்படம், ஒக்டோபர் 30ஆம் திகதியன்று, ஓடீடீயில் ரிலீஸாகிறது.

அந்த வகையில், ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் நயன்தாரா நடித்துள்ள “மூக்குத்தி அம்மன்” திரைப்படமும், ஓடீடீயில் ரிலீஸாக உள்ளதெனத் தகவல் வெளியாகியுள்ளது. படத்தின் படப்பிடிப்பு, ஏற்கெனவே முழுமையாக முடிந்துவிட்ட நிலையில், போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. எனவே, தயாரிப்பாளர் வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் ஐசரி கணேஷ், இத்திரைப்படத்தை விரைவில் ரிலீஸ் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

தியேட்டர்கள் திறக்கப்படுவதில் பல்வேறு சிக்கல்கள் நீடித்து வருவதால், “மூக்குத்தி அம்மன்” திரைப்படத்தை ஓடீடீயில் ரிலீஸ் செய்ய, படக்குழு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. விரைவில் இதுகுறித்த அறிவிப்பு வெளியாகும் என, கோலிவூட் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

## ஒக்டோபர் 30 ODD தளத்தில்
# ‘சூரரைப்போற்று’ ரிலீஸ்



“இறுதிச்சுற்று” சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா தயாரித்து நடித்துள்ள “சூரரைப்போற்று” திரைப்படம், ஒக்டோபர் 30ஆம் திகதியன்று,அமேசான் பிரைம் தளத்தில், தமிழ், தெலுங்கு மொழிகளில் உலகளவில் வெளியாகிறது.

இத்திரைப்படத்தின் நாயகியாக, அபர்ணா பாலமுரளி நடிக்க, மோகன் பாபு, பரேஷ் ராவல் ஆகியோரும் நடித்துள்ளனர்.

ஏர் டெக்கான் நிறுவனர் கேப்டன் ஜி.ஆர். கோபிநாத் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகள் மற்றும் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டே இப்படம் உருவாகிறது. ஜிவி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் முடிவடைந்து, கடந்த ஏப்ரல் மாதமே வெளியாக வேண்டியது. ஆனால், கொரோனா பிரச்சினையால் முடங்கி உள்ளது. தற்போதைய சூழலில், தியேட்டர் எப்போது திறக்கப்படும் என உறுதியாகச் சொல்லமுடியவில்லை. இதனால், படத்தை ஓடீடீயில் வெளியிட முடிவு செய்துவிட்டனர்.



# கர்ப்பமாக இருக்கிறேனா?

நடிகை சமந்தா, தெலுங்கு நடிகர் நாகசைதன்யாவை திருமணம் செய்துகொண்டு ஐதராபாத்தில் செட்டிலாகிவிட்டார்.

திருமணத்துக்குப் பிறகும், அவர் படங்களில் நடித்து வருகிறார். ஆனால், அவர் கர்ப்பமாக இருப்பதாகவும் நடிப்புக்கு ஓய்வு கொடுக்கப் போவதாகவும், அவ்வப்போது செய்தி வெளியாகி வருகிறது.

இந்தச் சூழலில், சமூக வலைதளத்தில் உரையாற்றிய சமந்தாவிடம் “நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்களா?” என இரசிகர் ஒருவர் கேட்டார். அதற்கு சமந்தா, “ஆமாம், நான் கடந்த 2017ஆம் ஆண்டில் இருந்து கர்ப்பமாகத் தான் இருக்கிறேன். ஏனோ தெரியவில்லை, இந்தக் குழந்தை வெளியே வரமாட்டேன் என அடம் பிடிக்கிறது”, எனக் கிண்டலாக பதிலளித்தார். இதன் மூலம், தான் கர்ப்பமாக இல்லை என்பதை சமந்தா திட்டவட்டமாகத் தெளிவுப்படுத்தியிருக்கிறார்.




## கொமியூனிட்டி ஷீல்ட்; லிவர்பூலை வீழ்த்தி
# சம்பியனானது ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க கொமியுனிட்டி ஷீல்ட் போட்டியில் ஆர்சனல் சம்பியனானது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் நடப்புச் சம்பியன்களான லிவர்பூலுக்கும், விலகல் முறையிலான இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடரின் சம்பியன்களான ஆர்சனலுக்குமிடையே வெம்ப்ளியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குறித்த போட்டியில் பெனால்டியிலேயே ஆர்சனல் சம்பியனாகியிருந்தது.

இப்போட்டியின் 12ஆவது நிமிடத்தில் ஆர்சனலின் அணித்தலைவரும் முன்களவீரருமான பியர்-எம்ரிக் உபமெயாங்க் பெற்ற கோல் காரணமாக அவ்வணி முன்னிலை பெற்றிருந்தது.

பின்னர் போட்டியின் 73ஆவது நிமிடத்தில், மாற்றுவீரராகக் களமிறங்கிய லிவர்பூலின் முன்களவீரர் தகுமி மினமினாவோ பெற்ற கோல் காரணமாக கோலெண்ணிக்கையை லிவர்பூல் சமப்படுத்தி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் போட்டியானது வழமையான நேர முடிவில் காணப்பட்டதையடுத்து பெனால்டி மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்பட்டது.

பெனால்டியில் ஆர்சனல் சார்பாக றெய்ஸ் நெல்சன், ஐன்ஸ்லி மைட்லான்ட்-நைல்ஸ், செட்ரிக் சொராஸ், டேவிட் லூயிஸ், பியர்-எம்ரிக் உபமெயாங்க் ஆகிய ஐவரும் தமது பெனால்டிகளை உட்செலுத்தியிருந்த நிலையில், லிவர்பூல் சார்பாக மொஹமட் சாலா, பேபின்ஹோ, தகுமி மினமினாவோ, கேர்ட்டிஸ் ஜோன்ஸ் ஆகிய நால்வரே தமது பெனால்டிகளை உட்செலுத்தியதுடன், கோல் கம்பத்துக்கு மேலால் றிஹியன் புரூஸ்டர் தனது பெனால்டியை செலுத்தியிருந்த நிலையில் 5-4 என்ற ரீதியில் ஆர்சனல் வென்றது.

## எவெர்ற்றனுக்கு செல்லும்
# ஜேம்ஸ் றொட்றிகாஸ்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான ஜேம்ஸ் றொட்றிகாஸை ஒரு பருவகாலத்துக்கு கடனடிப்படையில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான எவெர்ற்றன் ஒப்பந்தம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரெஞ்சு லீக் 1 கழகமான மொனாக்கோவிலிருந்து கடந்த 2014ஆம் ஆண்டு றியல் மட்ரிட்டில் ஒப்பந்தம் செய்யப்பட்ட 29 வயதான ஜேம்ஸ் றொட்றிகாஸ், இதுவரையில் 85 போட்டிகளில் விளையாடி 29 கோல்களைப் பெற்றிருந்தார்.

றியல் மட்ரிட்டின் முகாமையாளராக ஸினடி ஸிடேன் பதவியேற்ற பின்னர் றியல் மட்ரிட்டில் முன்னுரிமை வரிசையில் பின்தங்கியிருந்த ஜேம்ஸ் றொட்றிகாஸ், 2017ஆம் ஆண்டு தொடக்கம் கடந்தாண்டு வரையிலான இரண்டு பருவகாலங்களுக்கு ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சுக்கு கடனடிப்படையில் வழங்கப்பட்டிருந்தார்.

பயேர்ண் மியூனிச்சுக்காக 43 போட்டிகளில் விளையாடி 14 கோல்களை ஜேம்ஸ் றொட்றிகாஸ் பெற்றிருந்தார்.

எவெர்ற்றனில் தற்போது பயிற்சியாளராகவிருக்கும் கார்லோ அன்சிலோட்டியின் கீழ் றியல் மட்ரிட்டிலும், பயேர்ண் மியூனிச்சிலும் ஜேம்ஸ் றொட்றிகாஸ் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 31 ஓகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.